<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சரவணன் | நாள் | 13.03.2025 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணன் (எ) ராஜ்கவுண்டர் | | |

**<u>வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

11) நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால், தற்போது இல்லை. முன்பு செய்துவந்தேன். நான் கடந்த 27.11.2003 ம் தேதியில் ச.எண்.284/2B11 ல் உள்ள 2160-3/4 சதுரடி நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால், சதுரடி சரியாக நினைவில்லை. ஆனால், 5 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் மேற்படி தேதியில் நான் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் பதிவு நகல் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்தை நான் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 2160-3/4 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது.

12) மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் 5 ம் பக்கத்தில் 17 வது வரியில் "10 அடி அகல பொதுவீதி" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆவத்திலேயே மேற்படி 10 அடி அகல பொதுவீதியை நானும், கிருஷ்ணராஜ் கவுண்டர் வகையறாவும் பொதுவில் பயன்படுத்திக்கொள்ளலாம் என கண்டெழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கிருஷ்ணராஜ் கவுண்டர் வகையறாவிற்கு ச.எண்.284/4A ல் உள்ள நிலங்களைத்தான் மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால், சரிதான். மேற்படி 10 அடி அகல பொதுவீதி என்பது தான் ச.எண்.284/2B6 என்றால், சரியல்ல. கீழ் சிந்தாமணியூரிலிருந்து மேல் சிந்தாமணியூர் செல்லும் தென்வடல் தார்சாலையிலிருந்து தெற்குநோக்கி செல்லும் பாதைதான் மேற்படி ச.எண்.284/2B6 ஆகும். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி 10 அடி அகல பொதுவீதி தான் ச.எண்.284/2B6 என்றால், சரியல்ல.

13) தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் காணப்படும் சாலைதான் கீழ் சிந்தாமணியூரிலிருந்து மேல் சிந்தாமணியூர் செல்லும் தென்வடல் தார்சாலை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் காணப்படும் தார் சாலையிலிருந்து தெற்காக பிரிந்து செல்லும் தற்போது என்னிடம் காட்டப்படும் பாதை தான் ச.எண்.284/2B6 என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மேற்படி ச.எண்.284/2B6 ல் தெற்காக செல்லும் பாதையிலிருந்து கிழக்கு நோக்கி பிரியும் பாதை தான் ச.எண்.284/2B11B என்றால், அவ்வாறு ஒரு பாதையே இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் காணப்படும் வீடு என்னுடையது என்றால், சரிதான். மேற்படி வீடு எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், ச.எண்.284/2B11A ல் அமைந்துள்ளது. அவ்வாறெனில் மேற்படி புகைப்படங்களில் ச.எண்.284/2B11B எங்கு அமைந்துள்ளது என்றால், மேற்படி என் வீடு அமைந்துள்ள பகுதியிலேயே கலந்து அமைந்துள்ளது. மேற்படி புகைப்படங்கள் குறுந்தகடுடன் வாதி தரப்பு சான்றாவணம் **வா.சா.ஆ.9 (Ex.A.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) என் வீட்டிற்கு தெற்குபுறமாக என்ன சர்வே எண் உள்ளது என்றால், ச.எண்.284/2B4A அமைந்துள்ளது. மேற்படி ச.எண்.284/2B4A விற்கு வடபுறம் என்ன சர்வே எண் அமைந்துள்ளது என்றால், ச.எண்.284/2B11A மற்றும் ச.எண்.284/2B11B ஆகிய இரண்டும் கலந்து அமைந்துள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும் ச.எண்.284/2B4A க்கு வடபுறமாக ச.எண்.284/2B11B மட்டும் தான் அமைந்துள்ளது என்றாலும், நான் சொல்வது போல் ச.எண்.284/2B11A அமைந்திருக்கவில்லை என்றாலும், சரியல்ல. மேற்படி ச.எண்.284/2B11B க்கு வடபுறமாக ச.எண்.284/2B11A அமைந்துள்ளதா என்றால், நான் கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. அதனால் தற்போது என்னால் சரியாக கூற இயலாது.

15) ச.எண்.284/2B11A ற்கு தென்கிழக்கு மூலையில் குடிநீர் குழாய்கள் அமைத்துள்ளேன் என்றால், சரிதான். ஆனால் மேற்படி குடிநீர் குழாய்களானது ச.எண்.284/2B12 ல் தான் அமைந்துள்ளது. மேற்படி குழாயிலிருந்து கிழக்கு நோக்கி

காந்தி சிலை வரை பாதை செல்கிறது என்றால், சரியல்ல. அதில் நடைபாதை தான் செல்கிறது. 2003ம் வருடத்தில் ச.எண்.284/2B11ல் நான் சொத்துக்களை கிரயம் பெறும் பொழுது என் குடும்பத்திற்குள் பாகபிரிவினை நடைபெறவில்லை என்றால், சரிதான்.

16) கடந்த 20.02.2006ம் வருடத்தில் தான் என் குடும்பத்திற்குள் பாகபிரிவினை ஆனது என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினையில் ச.எண்.284/4A ல் உள்ள நிலம் என் சகோதரர் சந்திரசேகருக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். என் பாகபிரிவினை ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் ஏக மனதாக ஏற்படுத்தப்பட்டவை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் மேற்படி பாகபிரிவினை ஆவணத்தின் பதிவு நகல் என்றால், சரிதான்.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.